III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. NO.34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 05-07-2019

| | | |
|---|---|---|
| Name | :Sivakumar | Caste : |
| Father's/Husband's Name | :Bhaktavatsalu | Calling : |
| Age | : | Religion : |
| Village | : | Taluk: |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u> ராமமூர்த்தி பி.ஏ., பட்டயப் படிப்பு படித்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. தாமோதரன் 9- வது வரை படித்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா பக்தவட்சலம் எஸ்எஸ்எல்சி படித்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. கோவிந்தசாமி பி.யு.சி படித்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. பக்தவட்சலமும் கோவிந்தசாமியும் வெளியே வேலைக்கு ஏதாவது பேனார்களா என்றால் போனார்கள். வெளியே வேலைக்கு போனார்கள் ஆனால் அதனுடைய விவரங்கள் எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா 1992ல் காலமானார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு காலமானார். அறுவை சிகிச்சை ஏதாவது மேற்கொண்டாரா என்றால் இல்லை என்னுடைய அப்பாவிற்கு மனநிலை கோளாறு இருந்தது என்று சொன்னால் அப்படி எதுவும் கிடையாது. என்னுடைய அப்பா மனநிலை நோய்க்காக கீழ்ப்பாக்கம் மருத்துவமணையிலும் டாக்டர் சந்தோஷ் என்பவரிடமும் சிகிச்சை மேற்கொண்டார் என்று சொன்னால் தவறாகும் எனக்கு தெரிந்தவரை அவ்வாறு எதுவும் கிடையாது. என்னுடைய அம்மா தற்போது என்னுடன் தான் இருக்கிறார். வழக்கு குறித்து என்னுடைய அம்மாவிற்கு தெரியுமா என்றால் தெரியும். என் அம்மா நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் அவரால் நடக்க இயலாது அதனால் நீதிமன்றத்திற்கு வர இயலாது. வேறு மனநிலை பிரச்சினை உள்ளதா என்றால் அப்படி எதுவும் கிடையாது. என்னுடைய அப்பாவும் மற்றும் கோவிந்தசாமியும் தனியாக சம்பாதித்து பி மற்றும் சி பட்டிகை சொத்துக்களை தனியாக வாங்கினார்களா என்பதை காட்ட வருமான வரி துறை ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பிட்ட

தேதியில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று தெரிவித்து வருமான வரித் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது தவறாகும். கிரையப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அப்பாவும் மற்றும் கோவிந்தசாமியும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்து பி மற்றும் சி பட்டிகை சொத்துக்கள் வாங்கவில்லை என்றாலும் அதனால்' தான் அந்த விவரங்களை வருமான வரித் துறை சம்பந்தப்பட்ட ஆவணத்தில் தெரிவிக்க இயலவில்லை என்று சொன்னால் அது தவறாகும். ஆடிட்டர் சம்பந்தப்பட்ட ஸ்டேட்மெண்ட்டில் அதை காண்பித்துள்ளார். அதிலிருந்து வரும் வருமானமும் ஐ.டி. ரிட்டான்ஸில் காண்பிக்கப்பட்டுள்ளது. கிரையம் பெற்ற விவரம் குறிப்பாக வருமான வரித்துறைக்கு தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தவறாகும். 1979ல் என்னுடைய தகப்பனார் பார்ட்னர்ஷிப் பிசினஸ் செய்து வந்தார் என்று வருமான வரித் துறைக்கு தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தவறாகும். என்னுடைய அப்பா பக்தவட்சலுவின் வருமான வரித் துறை ரிட்டர்ன்ஸ் தாக்கல் செய்துள்ளேன். விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற பங்குதாரர் நிறுவனத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் சுப்பையாநாயுடுவின் ஐ.டி. ரிட்டர்ன்ஸில் காண்பிக்கப்பட்டுள்ளது. 1980 முதல் 1990 வரையுள்ள என்னுடைய தகப்பனாருக்குண்டான வருமான வரி கணக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். பி.சா.ஆ.25 ஆனது 1991-1992க்குண்டான ஆடிட்டர் ஸ்டேட்மெண்ட் என்றால் சரிதான். அதில் வருமான இழப்பீடு என்று குறிப்பிட்டு ரூ.88,975/- காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஸ்டேட்மெண்ட்டில் அவ்வாறு தான் காண்பிக்கப்பட்டுள்ளது. பி.சா.ஆ.14 ஆனது 20/10/1982 ஆவணத்தின்படி கோளடி சொத்து வாங்கும் சமயம் அதாவது 04/06/1980ல் கிரையத் தொகை கொடுப்பதற்கு என்னுடைய தகப்பனாருக்கு பணவசதி இல்லை என்று காணப்பட்டுள்ளது என்றாலும் அந்த கிரையத் தொகையை 2 வருடங்கள் கழித்து தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1979, 1980, 1981 ஆகிய ஆண்டுகளில் என்னுடைய தகப்பனாரின் வருமான நிலவரம் பி.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.26ல் தெரிகிறது என்று சொன்னால் அந்த ஆவணங்களில் என்னுடைய தகப்பனாரின் முழுமையான வருமான நிலவரம் காண்பிக்கப்படவில்லை. பி.சா.ஆ.25 ல் வருமான இழப்புக்குண்டான வருடம் 1990-1991 ஆகும். 1982க்கு பிறகு 1991, 1992 வரை என் தகப்பனாருக்கு நல்ல வருமானம் இருந்தது என்பதை காட்ட எந்த ஆவணமும் குறிப்பாக வருமான வரித் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். பி.சா.ஆ.26 ஆவணத்தில் எப் பட்டியல் சொத்தில் முதலீடு செய்ததை பற்றி மட்டும் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய அப்பாவும்

அவருடைய 3 சகோதரர்களும் லட்சுமி டாக்கீஸ் வாங்கியதை பற்றி காண்பிக்கப்பட்டுள்ளது. அதே போல் பி மற்றும் சி பட்டியல் சொத்துக்களுக்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.26 ஆவணத்தில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் பற்றி குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய அப்பா விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக 1979ல் தொடங்கினார் அதனால் விஸ்வஜோதி பிரிக்ஸ் பற்றிய குறிப்பு வர வாய்ப்பில்லை. 1979க்கு முன்னர் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் பங்குதாரர் நிறுவனம் இல்லை என்று சொன்னால் அது தவறு. 1979க்கு முன்னர் என்னுடைய அப்பா பார்ட்னராக இருந்திருந்தால் அதைப் பற்றிய விவரங்கள் பி.சா.ஆ.26ல் வந்திருக்கும் என்று சொன்னால் 1979க்கு முன்னர் என்னுடைய அப்பா விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸில் பங்குதாராக இருந்ததில்லை ஆனால் அதற்கு முன்னரே சுப்பையா நாயுடு அந்த நிறுவனத்தை பங்குதாரர் நிறுவனமாக நடத்தி வந்தார். வா.சா.ஆ.1 ஆவணமானது பாபு நாயுடு சுப்பையா நாயுடுவிற்கு எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் என்று சொன்னால் சரிதான். அந்த பத்திரத்தில் அயனம்பாக்கம் மற்றும் பெருமாள் அகரம் கிராமங்களில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் தொழில் நடத்த நிலங்கள் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி பாபு நாயுடு தனக்கு மட்டும் ரூ.7000/- பெற்றுக் கொண்டு விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற வியாபாரத்திலிருந்து தன்னை முழுவதுமாக விலக்கிக் கொண்டார் என்றால் சரிதான். ஏற்கனவே 20/6/1970ல் பங்குதாரர் நிறுவனம் கலைத்துக் கொள்வது சம்பந்தமான ஆவணம் எழுதப்பட்டது என்று வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதைப் பற்றி தெரியாது. 20/06/1970ல் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் பங்கு நிறுவனம் கலைக்கப்பட்டது என்று சொன்னால் தவறாகும். 20/06/1970க்கு பிறகு வா.சா.ஆ.1ன் படி சுப்பையா நாயுடு முழு உரிமையாளராக விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் வியாபாரம் மற்றும் அதன் கண்டுள்ள சொத்துக்களுக்கு முழு உரிமையாளர் ஆவார் என்று சொன்னால் தவறாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை முறையாக படித்துப் பார்க்காமலும் புரிந்து கொள்ளாமலும் சாட்சியம் அளிக்கிறேன்என்று சொன்னால் தவறாகும். வா.சா.ஆ.1 ஆவணம் முன்னிலையில் என்னுடைய முழு வழக்கும் மற்றும் வாதங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் அது தவறாகும். ஏ பட்டிகை அயனம்பாக்கத்தில் கண்டுள்ள சொத்து எத்தனை பரப்பளவு என்று சொன்னால் 14 ஏக்கர் 10 சென்ட் ஆகும் அதில் 16 அயிட்டங்கள் என்று சொன்னால் சரிதான். அதில் என் தகப்பனாருக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்று சொன்னால் ஏ பட்டிகை சொத்தில் காணப்பட்டுள்ள 5 அயிட்டம் சுப்பையாநாயுவிற்கு சொந்தம் கிடையாது. என்னுடைய அப்பாவும் அவருடைய 3 சகோதரர்களும்

சேர்ந்து மேற்கொண்ட 5 அயிட்ட சொத்துக்களை வாங்கினார்கள். மீதமுள்ள 11 அயிட்ட சொத்து சுப்பையா நாயுடுவின் சொத்தாகும். அதில் 5 ல் 1 பாகம் எங்களுக்குண்டு. ஆனால் 5 அயிட்டம் சொத்துக்களில் எங்களுக்கு 4 ல் 1 பங்கு உள்ளது. இதே விகிதாச்சாரத்தில் தான் தாமோதரன் கோவிந்தசாமி மற்றும் ராமமூர்த்தியின் வாரிசுதாரர்களுக்கு சேர வேண்டும் என்று சொன்னால் சரிதான். 1985ல் பெரும்பாலான சொத்துக்கள் செங்கரையில் வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் 1985 முதல் 1991 வரை வாங்கப்பட்டுள்ளது. இந்த கிரைய ஆவணங்களுக்கு நான் சாட்சி கிடையாது என்று சொன்னால் சரிதான். 1985ல் எனக்கு 7 வயது என்றால் சரிதான். செங்கரையில் அதாவது பி பட்டிகை சொத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. ஆனால் என்னுடைய எதிருரையில் குறிப்பிட்டுள்ளேன். செங்கரை சொத்தின் ஜக்குபந்திகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அந்த விவரங்கள் அனைத்தும் தற்போது எனக்கு ஞாபகமில்லை ஆனால் அதன் விவரங்கள் கிரையப் பத்திரத்தில் காணப்பட்டுள்ளது. செங்கரையில் உள்ள சொத்துக்கள் தனித்தனியாக உள்ளதா அல்லது ஒன்றாக உள்ளதா என்றால் ஒன்றாக தான் உள்ளது. என்னுடைய அப்பா கோவிந்தசாமியை விட எத்தனை வயது மூத்தவர் என்றால் 2 வயது மூத்தவர் ஆவார்.

வாதிதரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைப்பு.